# தீபாவளி பண்டிகை: பல வண்ணங்களில் மெட்ரோ ரயில்கள் அலங்கரிப்பு



தீபாவளி பண்டிகையை வரவேற்கும் வகையிலும் தீப ஒளி பண்டிகையைக் குறிப்பிடும் வகையிலும் பல்வேறு வண்ணங்களால் அலங்கரிக்கப்பட்டு காட்சி தரும் சென்னை மெட்ரோ ரயில்.

**சென்னை, அக்.30:** தீபாவளி பண்டிகையை முன்னிட்டு, சென்னையில் பல வண்ணங்களில் மெட்ரோ ரயில்கள் அலங்கரிக்கப்பட்டுள்ளது பயணிகளை வெகுவாகக் கவர்ந்துள்ளது.

தீபாவளிப் பண்டிகை நவம்பர் 6-ஆம் தேதி கொண்டாடப்படுகிறது.

இதை முன்னிட்டு, மெட்ரோ ரயில் பயணிகளுக்கு தீபாவளி பண்டிகையின் வாழ்த்துகளைப் பரிமாறிக் கொள்ளும் வகையிலும், தீபாவளியை அனைவரும் மகிழ்ச்சியாகக் கொண்டாடும் விதமாகவும் மெட்ரோ ரயில்களில் உள்பகுதியில் கவர்ச்சியான பல வண்ணங்களில் அலங்கரிக்கப்பட்டுள்ளன.

வண்ணமயமான தீபாவளி' என்பதை உணர்த்தும் வகையில், இந்த வண்ணங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

இது தவிர்த்து, பல வண்ணங்களில் கோலங்களும் மெட்ரோ ரயில்களை அலங்கரிக்கும் வகையில் போடப்பட்டுள்ளன.

ரயிலின் முன்பக்கத்திலும், உள்புறத்திலும் தீபாவளி வாழ்த்துகள் என எழுதப்பட்டுள்ளன. அலங்கரிக்கப்பட்ட இந்த மெட்ரோ ரயில்கள் செவ்வாய்க்கிழமை முதல் இயக்கப்பட்டன. விமான நிலையத்தில் இருந்து டி.எம்.எஸ். வரை வழித்தடத்திலும், பரங்கிமலை-சென்னை சென்ட்ரல் வரை வழித்தடத்திலும் இயக்கப்படும் 15 மெட்ரோ ரயில்கள் அலங்கரிக்கப்பட்டு காட்சி தருகின்றன. இது மெட்ரோ ரயில் பயணிகளை வெகுவாக கவர்ந்துள்ளது.